வருகிறது. நான் நேற்றே சொன்னேன். ஜூன் மாதம் திறக்க வேண்டியது ஆகஸ்டு மாதம்தான் திறந்திருக்கிறோம்—காவிரி. ஆகையாலே இப்போது நிலைமைகள் மாறியிருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு விட வேண்டும். கூடுமான வரையில் எல்லாப் பகுதிகளுக்கும் இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்து அளிக்கிறோம்.

பரம்பிக்குளம்—ஆளியாறு பற்றி ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. நான் பொறுப்பு ஏற்ற பிறகு 4 முறை, கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்களோடு பேசி இருக்கிறேன். மீண்டும் டெல்லியிலே கூட பேசியிருக்கிறேன். பல்வேறு பிரச்சினைகள் அதில் உள் அடங்கி இருக்கின்றன. ஆரணியாறு, நல்லாறு திட்டங்கள் எல்லாம் அதிலே சேர்க்கப்பட வேண்டி இருக்கின்றன. அதுபற்றி எல்லாம் விரிவாகப் பேசுவது நல்லதல்ல என்பதால்தான் அமைதியாக உட்கார்ந்து இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அங்கே நாக்கு நனைகிற அளவுக்கு மழை பெய்து இருக்கிறது என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாக்கு நனைவதற்குக் கூட அங்கே மழை பெய்யவில்லை. அந்த நிலைமையில்தான் எங்களுடைய பகுதி இருக்கிறது. தண்ணீர் முறைப்படி பாய்ந்து இருக்க வேண்டுமென்று சொல்கிறேன். பாசனத்துக்கு விடவில்லை என்று சொன்னீர்கள். அந்தக் குறையை நான் சொல்கிறேன் (குறுக்கீடு). அந்த மழை கூட எங்களுக்கு இல்லை. குடிப்பதற்கு அங்கு தண்ணீர் இல்லை. அதற்காகத் தான் கேட்கிறோம். ஆக, கேரளாவில் உங்களுடைய தோழமைக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பொழுது, கடலிலே வீணாகக் கலக்கும் தண்ணீரை தமிழகத்துக்குத் திருப்பிவிடுமாறு கேட்டுக்கொள்வதில் தயக்கம் ஏன் ?

13-45 மணி

மாண்புமிரு டாக்டர் மு. கருணாநிதி : கேரளாவில் எங்களுடைய தோழமைக் கட்சி இருக்கிறது. அவர்கள் தண்ணீர் கொடுக்கவில்லை என்கிறார்கள். ஆனால் கர்நாடகாவில் உங்கள் கட்சியே இருக்கிறது! ஏன் தண்ணீர் கொடுக்கவில்லை ?

திரு, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : முதலமைச்சர் அவர்கள் நான் முதலிலே பேசும்போது இங்கு இல்லை. நான் முதலிலே சொன்னேன். எங்களுடைய முன்னாள் முதல்வர், இன்றைய மக்களவை உறுப்பினர், என்னுடைய அருமை நண்பர் குண்டுராவ் அவர்கள் தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று ஒரு முறைக்கு இரு முறை பத்திரிகையிலே அறிக்கை விட்டு இருக்கிறார். நேரடியாக அவர்களைக் கேட்டுக்கொண்டும் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் நான் அவரைச் சந்தித்தபோது

'நீங்கள் போராடியாவது இந்தத் தண்ணீரை வாங்குவதற்கு உங்களுக்கு நியாயம் இருக்கிறது' என்றார். நான் சொல்லக் கூடாது ; இருந்தாலும் சொல்கிறேன் (குறுக்கீடு). கொஞ்சம் இருங்கள் ; எவ்வளவு நேரம் பேசப் போகிறேன் ? ஒவ்வொரு வரும் இந்த மாதிரி குறுக்கிட்டால் எப்படி ? இதற்குக் கூடவா ஒரு குறுக்கீடு ? இதற்கு என்ன குறுக்கீடு ?

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, குண்டு ராவ் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தவர் ; செல்வாக்கு உள்ளவர் ; காங்கிரஸ் கட்சியிலே தலைவர். அவர், இங்கே தண்ணீர் விட வேண்டும் என்று சொன்னார்; அதற்கு மின்சாரத்தைக் கொடுத்து விட வேண்டும் என்று கூட சொல்லவில்லை. (குறுக்கீடு) அன் கண்டிஷனலாகத்தான் கொடுக்கட்டுமே ; (குறுக்கீடு) நானே சொல் கிறேன். அவர் சொன்னார். அப்படி இருந்தும் காங்கிரஸ் கட்சியின் தலைவர். பெரிய காங்கிரஸ் கட்சியினுடைய முதலமைச்சராக இருக்கிறவர், அவர் மறுக்கிறார். அது அவர்களுக்குள்ளே இருக் கிற சண்டையினாலேயா ? அதற்கு ஏன் காவிரியிலே தண்ணீர் இல்லாமல் பண்ண வேண்டும் ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தயவுசெய்து அதை யெல்லாம் இங்கே சொல்லாதீர்கள். அவர் இன்னும் சில விவரங் களைக் கூட என்னிடத்திலே சொன்னார். நான் டில்லியில் அவரைச் சந்தித்தபோது உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது கூட, 'நீங்கள் பெறுவதில் நியாயம் இருக்கிறது' என்று என்னிடத்திலே சொன்னார். 'அதிலே நீங்கள் ஒன்றிலே தவறி விட்டீர்கள். அதைச் செய்தால் இப்போது கூட தண்ணீர் திறந்து விட வேண்டிய அவசியம் வரும். யாரோ அதிகாரிகள், இன்ஜினியர்கள் சொல் வதைக் கேட்டுக்கொண்டு இப்போது முதலமைச்சர் இருக்கிறார். தண்ணீர் திறந்து விடாமல் இருக்கிறார். அவர் சொல்கிற நிலை சரியல்ல. போதிய அளவிற்குத் தண்ணீர் இருக்கிறது. உடனடியாக 5 டி.எம்.சி. தண்ணீர் விட முடியும். 5 டி.எம்.சி.-க்கு மேலே நாங்கள் எப்போதும் கொடுக்கிற பழக்கம் உண்டு'. அவருக்குத் தெரியாத ஜனதா மெம்பர்கள் சொன்னார்கள். அதை வரவிலே வைக்க வேண்டுமே தவிர, உங்களுக்கு உள்ளே இருக்கின்ற சண்டை என்று பேசிக்கொண்டு ....— (குறுக்கீடு) .... நல்லது அல்ல. நல்லது அல்ல.......... தயவுசெய்து நான் சொல் கிறேன், இந்த மாதிரி பேசாதீர்கள். முதல்வர் அவர்கள் இப்போது வந்தார்கள். சொன்னதற்குப் பதில் சொல்லிவிட்டேன்.

போதிய தண்ணீரைப் பெறுவதற்கு உத்தரவாதம் இல்லாமலே தேர்தலை மாத்திரம் கருத்தில் கொண்டு பாசனப் பகுதிகளை விரிவுபடுத்த முயன்றால் பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை என்பதற்காகத்தான் பரம்பிக்குளம்—ஆளியாறு பற்றி நான் இவ்வளவு தூரம் சொன்னேன். அதன் விளைவாக ஏற்கனவே பாசன வசதிகள் பெற்றுவரும் பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்